

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் டாக்டர் அம்பேத்கர் நினைவு நாளை முன்னிட்டு சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகம் அரங்கில் (06.12.2025) அன்று நடைபெற்ற அரசு விழாவில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம், கல்வி, சுயதொழில் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பித்ததைத் தொடர்ந்து திருச்சிராப்பள்ளி கலையரங்கத்தில் நடைபெற்ற விழா அமைச்சர் கே.என்.நேரு பங்கேற்று 16 அரசு துறைகளின் சார்பில் 2058 பயனாளிகளுக்கு ரூபாய் 37 கோடியே 75 இலட்சம் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதில் அரசு உயர் அலுவலர்கள் இருந்தனர்.



கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை மாசாணியம்மன் திருக்கோயிலில் ரூ.7.70 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் திருப்பணிகளை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (07.12.2025) நேரில் ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடிக்க அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார். உடன் ஆணையர் பி.என். ஸ்ரீதர், கோவை மண்டல இணை ஆணையர் பெ.இரமேஷ், உதவி ஆணையர்கள் முத்துராமலிங்கம், கைலாசமூர்த்தி மற்றும் பொறியாளர்கள் உள்ளனர்.

## கடுமையான சூழல்களில் கண்ணுறங்காமல் காவல் காக்கும்

# படைவீரர்களின் பணி ஈடு இணையற்றது!

## கொடிநாளையொட்டி – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, டிச.8**

**கொடி நாளையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த வலைதளப்பதிவில், "கடுமையான சூழல்களில் கண்ணுறங்காமல் காவல் காக்கும் படை வீரர்களின் பணி ஈடு இணையற்றது" என்று குறிப்பிட்டார்.**

**கொடிநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-**

தாயகம் காக்கத் தன்னலம் மறந்து பணியாற்றும் முப்படை வீரர்களுக்கும், அவர்தம் குடும்பத்தினருக்கும் ஆயுதப் படை கொடிநாளில் நாட்டு மக்களின் சார்பில் எனது வணக்கங்கள்!

மக்கள் அச்சமின்றிப் பாதுகாப்பாக வாழ, உயிரைத் துச்சமாக எண்ணி, கடுமையான சூழல்களில் கண்ணுறங்காமல் காவல் காக்கும் படைவீரர்களின் பணி ஈடு இணையற்றது.

தியாகத் தீரர்களின் மறுவாழ்வுக்கும் அவர்களின் குடும்ப நலனுக்காகவும் கொடிநாள் நிதியளிப்பது குடிமக்களான நம் அனைவரின் கடமை!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## கழகத் தலைவர்– முதல்வர் தலைமையில் காணொலி காட்சி வாயிலாக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம்!

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட அனைத்து நிர்வாகிகள் - எம்.பி.- எம்.எல்.ஏ.க்கள் கலந்து கொள்வீர்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிக்கை!

காஞ்சிபுரம், டிச. 8 -

கழகத் தலைவர் - முதல்வர் தலைமையில் காணொலி காட்சி வாயிலாக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் இன்று காலை நடைபெறுகிறது என மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவித்துள்ளார்.



இது குறித்து அவரது அறிக்கை வருமாறு :-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் சார்பில் இக்கூட்டம் இன்று (8.12.2025) திங்கள் கிழமை காலை 9.30 மணியளவில் ஆலந்தூர் கத்திப்பாரா சந்திப்பில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் காணொலி காட்சி வாயிலாக நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள்- தொகுதி பார்வையாளர்கள் மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் கழகச் செயலாளர்கள் - தலைமை செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் பங்கேற்க வேண்டும் என்று கழகப் பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார்.

ஆகவே, மேற்கண்ட அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:- "என் வாக்குச்சாவடி - வெற்றி வாக்குச் சாவடி"

இவ்வாறு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ. அன்பரசன் அறிவித்துள்ளார்.

# வேளச்சேரி மேற்குப் பகுதிக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## பகுதிப் பொறுப்பாளர் வே.ஆனந்தம் எம்.சி. அறிவிப்பு!

சென்னை, டிச. 08 -

வேளச்சேரி மேற்கு பகுதிக் கழகப் பொறுப்பாளர் வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி மேற்குப் பகுதிக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, பகுதி அவைத் தலைவர் சி.பழனி தலைமையில் இன்று (08.12.2025 - திங்கட்கிழமை) மாலை 6 மணியளவில், வேளச்சேரி, சிறுவர் விளையாட்டு பூங்கா, விஜயநகர், 1 வது மெயின் ரோட்டில் உள்ள பகுதிக் கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் பகுதிக்குட்பட்ட மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் மற்றும் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், வட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்கும் மாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:-

கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு வேளச்சேரி மேற்கு பகுதிக் கழகப் பொறுப்பாளர் வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ – க.தனசேகரன் எம்.சி – கே.கண்ணன் எம்.சி. பங்கேற்பு!

# கலைஞர் நகர் தெற்கு பகுதி இளைஞர் அணி அவசர ஆலோசனைக் கூட்டம்!

## பகுதி அமைப்பாளர் சி.எச்.தினேஷ் அறிக்கை!

சென்னை, டிச. 08 -

கழக இளைஞரணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் வருகிற 14.12.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று திருவண்ணாமலை கலைஞர் திடலில், தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் சிறப்புரையாற்றும் வடக்கு மண்டல இளைஞரணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்பதற்கு மாவட்ட கழகச் செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, சென்னை தெற்கு மாவட்டம், கலைஞர் நகர் தெற்குப் பகுதி இளைஞரணி ஆலோசனைக் கூட்டம் இன்று (08.12.2025 - திங்கட்கிழமை) மாலை 6 மணி அளவில், பகுதிக் கழக அலுவலகத்தில் பகுதி இளைஞரணி அமைப்பாளர் சி.எச்.தினேஷ் தலைமையில், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகரராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன் எம் சி, பகுதிக் கழகச் செயலாளர் கே.கண்ணன் எம்.சி. ஆகியோர் முன்னிலையில் வட்டக் கழக செயலாளர்கள் சோ.செந்தில்குமார், ஐம்பு. முருகன், பூக்கடை ஆர்.பழனிச்சாமி, இராஜ்.செழியன், பிகே. குமார், அ.கதிரேசன், கே.சதீஷ் கண்ணன் ஆகியோர் வரவேற்புரையில் நடைபெற இருக்கிறது.

எனவே இக்கூட்டத்தில் கலைஞர் நகர் தெற்கு பகுதிக்கு உட்பட்ட பகுதி துணை அமைப்பாளர்கள், வட்ட அமைப்பாளர்கள், வட்டத் துணை அமைப்பாளர்கள் கண்டிப்பாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு பகுதி அமைப்பாளர் சி.எச்.தினேஷ் கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி டி.அசோக்குமார் நன்றி கூறுகிறார்.


